TAMIL NADU LEGISLATURE LIBRARY
23 JUN 1973
MADRAS.

தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1973 மார்ச் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 191, 192, 193 ஆகிய எண்ணுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

முக்கூடலில் துணைப் பதிவாளர் அலுவலகம்

*194 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடலில் ஒரு உதவிப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தற்சமயம் இல்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, முக்கூடலில் பத்திரப் பதிவு அலுவலகம் இல்லாததால், பத்திரம் பதிவு செய்வதற்கு வீரவநல்லூர் செல்லவேண்டியிருக்கிறது. 15 மைல் சுற்றி அம்பாசமுத்திரம் பாதையில் பத்திரப் பதிவு அலுவலகம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, முக்கூடலில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் துவக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை அரசு அறியுமா? அங்கிருந்து ஏதாவது மனுக்கள் அல்லது மகசர்கள் இதுகுறித்து வந்துள்ளனவா? ஓர் ஊரில் பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமென்றால் என்ன என்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: முக்கூடலில் புதிதாகப் பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டால் அதன் ஆட்சி எல்லையில் வடக்கு வீரவநல்லூர் அலுவலகத்திலிருந்து (முக்கூடல் உட்பட) நான்கு கிராமங்களும், அம்பாசமுத்திரம் அலுவலகத்திலிருந்து நான்கு கிராமங்களும்,

சேர்க்கப்படத்தக்கதாக இருந்தன. ஆனால், மேற்படி பத்து கிராமங்களைக் கொண்ட முக்கூடல் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் ஆண்டு சராசரிப் பதிவு 1,002 ஆக இருக்கும். இது ஓர் உதவிப் பதிவாளருக்கும் அவரது அலுவலகப் பணியாளர்களுக்கும் போதிய அளவு வேலை உள்ளதாக இருக்காது. அந்த நிலை ஏற்பட்ட பிறகு இந்தப் பிரச்சினையைப் பரிசிலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 195, 196 ஆகிய எண்ணுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

உபரி நிலங்களைப் பயன்படுத்தல்

*197 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் உபரியாகக் கிட்டும் நிலங்களை மாதிரிக் கூட்டுப்பண்ணை முறையில் செயல்படுத்தும் திட்டம் ஏதேனும் இவ்வரசிடம் உள்ளதா,

THE HON. THIRU P. U. SHANMUGAM: There is no scheme for utilisation of the surplus lands through model Co-operative Farming Societies. The surplus lands are assigned to the various categories of persons in accordance with the rules framed under the Land Ceiling Act in the order of priority laid down therein.

திரு. என். கிட்டப்பா: நில உச்ச வரம்புச் சட்டத்தின்மூலம் 15 ஸ்டாண்டர்டு ஏக்காராதான் உச்ச வரம்பு என்று நிர்ணயித்த பிறகு உபரி நிலம் தமிழகத்தில் எவ்வளவு கிடைக்கும். அது எந்த எந்த வகையினருக்குப் பிரித்தளிக்கப்பட இருக்கிறது, எவ்வளவு எவ்வளவு அளிக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1971 ஆம் ஆண்டு கொண்டு வந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்குப் பிறகு எவ்வளவு உபரி நிலம் கிடைக்கும் என்ற புள்ளி விவரம் இப்பொழுது என் கையில் இல்லை. ஏற்கெனவே நிலச் சீர்திருத்தச் சட்டம் போட்டபோது நாம் எப்படி எப்படி நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்குச் சட்டத்திலேயே வரம்பு முறைகள் வைத்திருக்கிறோம். அதன்படி கொடுக்கப்படும். ஒருவருக்கு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்காவுக்கு மேற்படாமல் கொடுக்கப்படும்.